# TNPSC Tamil Current Affairs 6th & 7th May 2017

1. முக்கிய சேவைகளின் செயல்திறனுக்காக, தொழில்நுட்ப தரத்தை தளர்த்திக்கொள்ள Insolvency and Bankruptcy Board of India (IBBI) எந்தக்குழுவை அமைத்துள்ளது?

A. R B பர்மன் குழு

B. நந்தி லால் சாரதா குழு

C. புலக் கோஷ் குழு

D. V G கண்ணன் குழு

விடை : A. R B பர்மன் குழு

(IBBI)ன் 14வது ஒழுங்குமுறை விதிப்படி, இந்தக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு தேசிய புள்ளியியல் குழுவின் தலைவர் பேராசிரியர் திரு. R B பர்மன் அவர்களின் தலைமையின் கீழ் செயல்படும். இக்குழு முக்கிய சேவைகளின் செயல்திறனுக்காக, தொழில்நுட்ப தரத்தை தளர்த்திக்கொள்ள சில பரிந்துரைகளை கூறும். அதாவது, நிலையான சேவைகளில் சிறு மாற்றம், பயனாளிகளின் பதிவு பற்றி, தனித்தன்மையான கூறுகள் போன்றவையாகும்.

2. உலகின் மிகப்பெரிய X-லேசர் கதிரான "European XFEL", முதன் முதலில் எந்த நாட்டிலிருந்து பாய்ச்சப்பட்டது?

A. பிரான்ஸ்

B. ஜெர்மனி

C. இத்தாலி

D. பெல்ஜியம்

விடை : B. ஜெர்மனி

European X-ray Free Electron Laser (XFEL)தான் உலகிலேயே மிகப்பெரிய X-லேசர் கதிரை உற்பத்தி செய்தது. 3.4 கி. மீ நீளமுடைய இது ஹாம்பர்கிலிருந்து ஷேனபெல் வரை பாய்ந்தது. இதிலிருந்து விஞ்ஞானிகள் நிறைய புதிய பொருட்களை கண்டறிந்தனர். இது சாதாரண துகள் முடுக்கிகளைக்காட்டிலும் பில்லியன் மடங்கு பிரகாசமானதாகும்.இதன் அலை நீளம் 0.8 நேனோ

மீட்டர்களாகும். இதனை பயன்படுத்தி புகைப்படங்கள், காணொளிகளை அணு அளவில்கூட எடுக்க முடியும். மேலும், நோய்களுக்கான சிகிச்சைமுறைகளையும் கண்டறியலாம்.

**3. 2017ம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த இந்திய போக்குவரத்து மற்றும் தளவாடங்களின் உச்சிமாநாடு, எந்த நகரத்தில் நடைபெற்றது?**

A. சென்னை

B. ராஜ்கோட்

C. புது டில்லி

D. புனே

விடை : C. புது டில்லி

மத்திய சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சகம், 2017ம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த இந்திய போக்குவரத்து மற்றும் தளவாடங்களின் உச்சிமாநாட்டை மே 3 அன்று புது டில்லியில் நடத்தியது. இந்த மூன்று நாள் மாநாட்டில் பல்முனை வளர்ச்சித்திட்டங்களுக்காக பங்குதாரர்களின் நிலைபற்றி பேசப்பட்டது. 34 முதலீட்டாளர்களின் 2 லட்சம் கோடிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இந்த மாநாட்டில் மத்திய மாநில அமைப்புகளை சார்ந்தவர்கள், உலக வங்கி, உலகலாவிய போக்குவரத்து உறுப்பினர்களென இந்திய & அயல்நாட்டைசேர்ந்த 3000 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

**4. சமீபத்தில் காலமான Captain Chand Roop, எந்த விளையாட்டைச்சார்ந்தவர்?**

A. பேட்மிட்டன்

B. குத்துச்சண்டை

C. டென்னிஸ்

D. மல்யுத்தம்

விடை : D. மல்யுத்தம்

துரோணாச்சாரியார் விருதுபெற்ற பிரசித்திபெற்ற மல்யுத்த பயிற்சியாளர் Captain Chand Roop, தனது 87வது வயதில் டில்லியில் காலமானார். இவர்

1948ல் ராணுவத்தில் மல்யுத்த பயிற்சி தருவதற்காக சேர்ந்தார். அங்கே இவர் பல வீரர்களுக்கு மல்யுத்த பயிற்சி கொடுத்தார், அதில் ஒருவரே புகழ்பெற்ற மல்யுத்த வீரரான விஜய் குமார் ஆவார். இவர் (Captain Chand Roop) ஆசிய விளையாட்டில் வெண்கலப்பதக்கமும், பாரத் கேசரி பட்டமும் பெற்றிருக்கிறார். அர்ஜுனா விருது பெற்ற வீரர்களான Ombeer Singh, Rohtash Dahiya, Ashok Kumar and Ramesh Kumar ஆகியோரின் பயிற்சியாளர் இவரே.

5. காலமான ஓய்வுபெற்ற நீதிபதி Leila Seth, எந்த உயர் நீதிமன்றத்தின் முதல் பெண் தலைமை நீதிபதியாவார்?

A. இமாச்சல பிரதேச உயர்நீதி மன்றம்.

B. மத்திய பிரதேச உயர்நீதி மன்றம்.

C. ஆந்திர பிரதேச உயர்நீதி மன்றம்.

D. கேரளா உயர்நீதி மன்றம்.

விடை : A. இமாச்சல பிரதேச உயர்நீதி மன்றம்.

ஓய்வுபெற்ற நீதிபதி Leila Seth(86), இமாச்சல பிரதேச உயர் நீதிமன்றத்தின் முதல் பெண் தலைமை நீதிபதியாவார். இவர் சமீபத்தில், நொய்டாவிலுள்ள தனது இல்லத்தில் காலமானார். லண்டன் பார் தேர்வில் முதலிடம் பிடித்த முதல் பெண்ணும், டில்லி உயர் நீதிமன்றத்தின் முதல் பெண் நீதிபதியும் இவரே. டிசம்பர் 16 அன்று டெல்லியில் நடந்த கூட்டு வன்புணர்வு நிகழ்வுக்குப்பின், 2012ல் பாலியல் தொல்லைகள் தரும் கிரிமினல் குற்றவாளிக்களுக்கான தண்டனையில் சட்ட திருத்தம் மேற்கொள்ள மூன்றுபேர் கொண்ட "ஜஸ்டிஸ் வெர்மா குழு" அமைக்கப்பட்டது. அம்மூவரில் ஒருவராக இவர் இருந்தார். 2000 வரை சட்டக்குழுவிலும் உறுப்பினராக இருந்தார். இந்து முன்னணி விதியில், கூட்டுக்குடும்பத்தில் வாழும் பெண்களுக்கு சொத்தில் சமபங்கு உண்டு என்ற சட்ட திருத்தத்தையும் கொண்டு வந்தார். இவர் புகழ்பெற்ற எழுத்தாளர் விக்ரம் சேத்தின் தாயாராவார்.

6.எந்த மாநிலம் ஐ. நா & IIITயுடன் இணைந்து புதுமை கண்டுபிடிப்புகளுக்கான ஆய்வகம் அமைக்க கையெழுத்துத்திட்டுள்ளது?

A. மத்திய பிரதேசம்

B. சத்தீஸ்கர்

C. அசாம்

D. ஒடிசா

விடை : B. சத்தீஸ்கர்

சத்தீஸ்கர் அரசு ஐ.நா & IIITயுடன் இணைந்து புதுமை கண்டுபிடிப்புகளுக்கான ஆய்வகம் அமைக்க மே 7 2017 அன்று முத்தரப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்துத்திட்டுள்ளது. இதற்கான வேலைகள் கையெழுத்துத்திட்ட அடுத்த 15 நாட்களில் தொடங்கப்படும். இதன் நோக்கம் "ஸ்மார்ட் கிராமங்களை" டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் கீழ் கொண்டு வருவதே ஆகும்.

7. சர்வதேச பத்தியமில்லா நாள் International No diet day (INDD) எந்த நாளில் அனுசரிக்கப்படுகிறது?

A. மே 7

B. மே 8

C. மே 6

D. மே 5

விடை : C. மே 6

வருடந்தோறும் மே 6 அன்று ஆரோக்கியமான உணவுப்பழக்கத்தை வலியுறுத்தியும், தேவையற்ற உணவுப்பழக்கத்தின் தீமையைப்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இந்நாள் அனுசரிக்கப்படுகிறது. இதன் அடையாளம் வெளிர் நீல நிற ரிப்பனாகும்.

8. 2016க்கான Wisden-MCC (Melbourne Cricket Council) Cricket Photograph-ஐ வென்றவர் யார்?

A. Paul Miller

B. Adrian Murrel

C. Nigel Davies

D. Saqib Majeed

விடை : D. Saqib Majeed

2016க்கான Wisden-MCC (Melbourne Cricket Council) Cricket Photograph-ஐ ஸ்ரீநகரைச்சேர்ந்த, புகைப்படக்கலைஞரான Saqib Majeed வென்றுள்ளார். அதுல் கம்ப்ளேவுக்கு பிறகு இவ்விருதைப்பெறும் இரண்டாவது ஆசியரும், முதல் காஷ்மீரைச்சேர்ந்தவரும் இவரே. வருடந்தோறும் MCC 'Wisden Cricketer Almanack' என்ற புத்தகத்தை வெளியிடும். இதில் உலகின் சிறந்த விளையாட்டு சம்பந்தமான புகைப்படங்கள் இடம்பெற்றிருக்கும்.

9. சமீபத்தில் மறைந்த நீச்சல் வீரர் Adolph Kiefer எந்த நாட்டைச்சேர்ந்தவர்?

A. ஐக்கிய நாடுகள் (US)

B. ஜெர்மனி

C. பிரான்ஸ்

D. இரஷ்யா

விடை : A. ஐக்கிய நாடுகள் (US)

உலகின் மிக வயதான ஒலிம்பிக் வெற்றி வீரர் Adolph Kiefer(98), சமீபத்தில் Wadsworth, Illinoisல் காலமானார். உலகிலேயே 100 நீட்டளவு(yard) தூரத்தை ஒரே நிமிடத்தில் பின்னிருந்து நீச்சலடித்து கடந்தவர் இவர் ஒருவரே. நீர் விளையாட்டுகளுக்காக நிறைய புதிய கண்ண்டுபிடிப்புகளை இவர் தன் வாழ்நாளில் உருவாக்கியுள்ளார்.

10. எந்த நாட்டின் ஹாக்கி அணி 2017 ஆண்டுக்கான Sultan Azlan Shah கோப்பையை வென்றுள்ளது?

A. இந்தியா

B. நியுசிலாந்து

C. ஆஸ்திரேலியா

D. பிரிட்டன்

விடை : D. பிரிட்டன்

26வது Sultan Azlan Shah கோப்பைக்கான இறுதிப்போட்டி, மே 7 2017 அன்று Ipoh,

மலேசியாவில் நடைபெற்றது. இதில் ஆஸ்திரேலியாவை 4-3 என்ற கணக்கில் பிரிட்டன் வெற்றிகொண்டது. 23 ஆண்டுகளுக்கு பிறகு பிரிட்டனுக்கு இவ்வெற்றி கிடைத்துள்ளது. இந்தியா, நியூசிலாந்தை 4-0 என்ற கணக்கில் விஞ்சி, வெண்கலப்பதக்கம் வென்றது.

winmeen